SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# ஜுலை 2016 பரீட்சை - AA1 மட்டம்
**(July 2016 Examination - AA1 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: 13**

# வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவெ ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA1 பரீட்சை – ஜுலை 2016

## (13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 2 |
| 1.2 | 1 |
| 1.3 | 2 |
| 1.4 | 3 |
| 1.5 | 3 |
| 1.6 | 4 |
| 1.7 | 4 |
| 1.8 | 1 |
| 1.9 | 2 |
| 1.10 | 1 |
| 1.11 | பிழை |
| 1.12 | சரி |
| 1.13 | பிழை |
| 1.14 | சரி |
| 1.15 | சரி |
| 1.16 | அதிகரிக்கின்றது |
| 1.17 | வீழ்ச்சியடையும் |
| 1.18 | பெயரளவு GDP |
| 1.19 | ஒடுங்கிய / குறுகிய பண நிரம்பல் (M1) |
| 1.20 | பரந்த / விசால பணப் நிரம்பல் |

**பிரிவு *A* இன் நிறைவு**

## பகுதி - B

**நான்கு வினாக்களுக்கும் விடையளிக்க.**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

i) இலங்கையின் பொருளாதார முறைமையானது ஒரு கலப்புப் பொருளாதார முறைமையாகும். இது முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு (சந்தைப் பொருளாதார அமைப்பு) மற்றும் சோசலிச பொருளாதார அமைப்பு (திட்டமிடல் பொருளாதார அமைப்பு) என்பனவற்றின் சேர்க்கையாகும்.

ii) சொத்தின் உரிமைத்தன்மை, பொறிமுறை சிக்கலை தீர்க்கும் முறைமை மற்றும் ஊக்க அமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் பொருளாதார முறைமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் கலப்புப் பொருளாதாரத்திற்குரிய ஆதாரங்கள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **சொத்தின் உரிமைத்தன்மை (Property Ownership)**
  இலங்கையானது பொதுசன மற்றும் தனியார் சொத்து உரிமைத்தன்மை கொண்டது. சில வளங்கள் அரசாங்கத்திற்கு உரிமையானது மற்றும் மற்றையவை தனியார் சொத்து உரிமையாளர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.
- **பொறிமுறைச் சிக்கலை தீர்க்கும் முறைமை. (Problem Solving Mechanism)**
  விலைப் பொறிமுறை மற்றும் திட்டமிடல் பொறிமுறையானது சமூதாயத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை பகிர்ந்தளிக்க மற்றும் வளங்களை ஒதுக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.
- **ஊக்க அமைப்பு (Incentive system)**
  தனியார் துறைகள் இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிக்கின்றது. அதேசமயம் அரசாங்கத் துறையானது பொதுநலத்தை அதிகரிக்க பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

(b) எதனை உற்பத்தி செய்தல்? (ஒதுக்கீட்டுப் பிரச்சனைகள்)

எதனை உற்பத்தி செய்தல் என்பது பொருளாதாரமானது பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியும் அதன் உற்பத்தி அளவு என்பவைற்றைக் குறிக்கிறது. இது அரிய வளங்களுக்கான ஒரு பிரச்சனையாகும் ஏனெனின் இவ்வளங்களை பல்வேறு பொருளாதார செயற்பாடுகளுக்கு பதிலீடாக பயன்படுத்தப்படுவதேயாகும். இது எல்லாச் சமூதாயங்களுக்கும் ஒரு பொதுப்பிரச்சனையாகும்.

எவ்வாறு உற்பத்தி செய்தல்?

இது எதனைக் குறிக்கின்றது என்றால் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு பயன்படும் குறிப்பிட்ட நுட்பங்கள் மற்றும் காரணிகளின் சேர்க்கைகளை தேர்ந்தெடுப்பதையாகும் ஒரு பொருள் அல்லது சேவைகளை சாதாரணமாக உற்பத்தி செய்ய பல்வேறு காரணிகளின் சேர்க்கை மற்றும் நுட்பங்கள் இருந்தாலும் எதனைப் பயன்படுத்துவது என்பதில் பிரச்சினை எழக்கூடும். இது எல்லாச் சமூதாயங்களுக்கும் பொதுவானதாகும்.

யாருக்காக உற்பத்தி செய்தல் வேண்டும்?

யாருக்காக உற்பத்தி செய்தல் என்பது பொருளாதார காரணிகளின் உரிமையாளர்களுக்கிடையில் தேசிய வருமானத்தை தீர்மானித்து பகிர்ந்தளிப்பதைக் குறிக்கிறது. சமூதாயத்தின் ஒவ்வொருவருக்காகவும் உற்பத்தி செய்ய வளங்கள் போதுமானவையாக இல்லாததால், இப்பிரச்சனை அனைத்து சமூதாயங்களுக்கு பொதுவானதாகும்.

***(10 புள்ளிகள்)***

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

i) குறிப்பிட்ட நிதிக்காலப்பகுதிக்கான பாதீட்டில் அரசாங்கத்தின் வருவாயை விட அரசாங்கத்தின் செலவு மீறும் போது அது ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைக் குறிக்கின்றது. இவ் சூழ்நிலையானது தற்போதைய மற்றும் மூலதன அரசாங்க செலவின் கூடுதலானது. அரசாங்கத்தின் வரி மற்றும் வரியில்லா வருவாயை மீறுகிறது.

ஒட்டுமொத்த அரசாங்க பாதீட்டு பற்றாக்குறையைக் பின்வருமாறு கணிக்கலாம்.

| | |
|---|---|
| மொத்த அரசாங்க வருவாய் | xx |
| கழிக்குக - மீண்டும் மீண்டும் வரும் செலவுகள் | (xxx) |
| நடைமுறைக் கணக்கின் மீதி | xx |
| கழிக்குக: மூலதன செலவு | (xx) |
| ஒட்டுமொத்த பாதீட்டுப் பற்றாக்குறைகள் | (xx) |

ii) அரசாங்கத்தின் பாதீட்டு நிதியீட்டல் மூலங்கள் பின்வருமாறு சுருக்கலாம்.

உள்நாட்டு மூலங்கள்

- வங்கி சாரா மூலங்கள்
    - o தேசிய சேமிப்பு வங்கி
    - o ஊழியர் சேமலாப நிதியம்.
    - o ஊழியர் நம்பிக்கை நிதியம்.
    - o லொத்தர் சபை
- வங்கி மூலங்கள்
    - o இலங்கை மத்திய வங்கி
    - o வணிக வங்கிகள்

வெளிநாட்டு மூலங்கள்

- o வெளிநாட்டு உதவிகள் மற்றும் மானியங்கள்
- o வெளிநாட்டுக் கடன்கள் (நிறுவனங்கள் மற்றும் நாடுகள்)

b) அரசதுறை முயற்சிகளின் அனுகூலங்கள் பின்வருமாறு,

- இதன் பிரதான நோக்கமானது இலாபமீட்டாது சேவையை வழங்குவதாகும். ஆகவே இது பொது நலத்தை மேம்படுத்த உதவுகிறது.
- இலாபம் எவருக்கும் தனிப்பட்ட சொந்தமல்ல என்பதால் ஈட்டப்படும் லாபமானது அரசாங்க வருவாயுடன் சேர்க்கப்படும். இவ்லாபம் சமூக நலனுக்காக பயன்படுத்தப்படும்.
- அரசாங்கத்திற்கு பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை வெளியீடு செய்ய திறன் உள்ளது.
- அரசுதுறை முயற்சிகள் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த நிபுணர்களிடம் இருந்து சேவையை பெற முடிவதால் திறனை மேம்படுத்த முடியும்.
- அரசுதுறை முயற்சிகளின் தவறான நடத்தையானது பொதுப் பிரதிநிதிகள் மூலம் வெளிப்படுத்தலாம்.
- வேலையின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் உள்ளது.

***(10 புள்ளிகள்)***

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) பணத்தின் தொழிற்பாடுகள் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

**பரிமாற்று ஊடகம் (Medium of exchange)**

சமூகத்தில் பணமானது பொருள் மற்றும் சேவைகளை மாற்றீடு செய்ய பயன்படுகிறது. இது பணத்தின் மிக முக்கியமான தொழிலாகும். மக்கள் பணத்தைப் பயன்படுத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்கலாம், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கி பணத்தை பெற முடியும். இது பணத்தின் பிரதான தொழிலாகும்.

**பெறுமதியாக சேமிக்கப்படக்கூடியது. (Store of value)**

பணமானது சேமிப்பை தெரிவு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் கொள்வளவு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு தற்போதைய நுகர்வுத் தியாகம் மூலம் சேமிக்கப்படக்கூடியதாக பயன்படுத்தப்படுகிறது. மக்கள் அவர்களுடைய செல்வத்தை அல்லது சொத்தை வெவ்வேறு வடிவங்களில் சேகரிக்க முடியும். பணமும் செல்வச்சேகரிப்பில் ஒரு வடிவமாக சேர்க்கப்படக்கூடியது. பணத்தின் இவ்வகையான பண்பு பணச்சொத்து செயற்பாடு எனப்படும்.

**மதிப்பீட்டு அலகாக செயற்படல்**

பணமானது பொதுவான அலகாகும். இது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையை ரூபாய் மற்றும் சதத்தில் ஒப்பிட முடியும். பொருட்கள், சேவைகள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி பணத்தினால் அளக்கப்படும்.

**பிற்போடப்பட்ட கொடுப்பனவு செய்தல்.**

இன்று நுகரப்பட்ட பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பவை எதிர்காலத்தில் செலுத்த அனுமதிக்கின்றது. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பணத்தை அல்லது பொருளை கடன் வாங்கி பண எதிர்கால அடிப்படையில் செலுத்தலாம்.

b) **வணிக வங்கிகளின் தொழிற்பாடுகள்**

- பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைக் கவருதல். (சேமிப்புக்கணக்கு, நடைமுறைக்கணக்கு, நிலையான வைப்புக்கள் அல்லது நேரகால வைப்புக்கள்)
- கடன் அல்லது மேலதிகப்பற்று வடிவில் பணத்தை வழங்கல்.

- வங்கியானது கட்டணம் செலுத்தும் பொறிமுறையை வழங்குகிறது. ஆகவே தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் ஒன்றுக்கொன்று கட்டணம் செலுத்த முடியும்.
- தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் அவர்களுடைய செல்வத்தை சேமித்து வைக்கும் இடத்தை வழங்குகிறது.
- தனிநபர்கள் பாதுகாப்பாக அவர்களுடைய தங்க நகைகளை பாதுகாக்க இடம் வழங்குகிறது.
- முதலீடுகள் சம்பந்தமாக தனிநபர்களுக்கும் மற்றும் கம்பனிகளுக்கும் அறிவுரைகளை வழங்குகிறது. அத்துடன் உதவியும் செய்கிறது.
- நாணயக்கடித செயற்பாட்டின் மூலம் சர்வதேச வர்த்தகத்தை வழிவகுத்து இறக்குமதியாளர் மற்றும் ஏற்றுமதியாளருக்கு உதவியை வழங்குகிறது.
- வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைக்கு வழிவகுக்கிறது. ***(10 புள்ளிகள்)***

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) வர்த்தக மாற்றுவீதம் என்பது ஏற்றுமதி செய்யப்பட்ட ஓர் அலகு உற்பத்திக்கு கொள்வனவு சக்தியை இறக்குமதி செய்வதாகும். பல எண்ணிக்கையான வெளிநாட்டுப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட அதற்குப்பதிலாக உள்நாட்டு உற்பத்திப் பொருளின் அலகை ஏற்றுமதி செய்தலாகும்.

$$\text{வர்த்தக மாற்றுவீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைகளின் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைகளின் சுட்டெண்}} \times 100$$

- வர்த்தக மாற்றுவீதமானது நாட்டின் இறக்குமதியில் இருந்து ஏற்றுமதிக்கு தொடர்புடைய விலையில் தங்கியுள்ளது.
- ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்கள் ஆனது வர்த்தக மாற்றுவீதத்தைப் பயன்படுத்தி அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் வர்த்தக மாற்றுவீதத்தின் முன்னேற்றமானது நாட்டிற்கு அதனது இறக்குமதிப் பொருட்களுக்கு குறைந்தளவே செலவு செய்ய வேண்டியதாய் இருப்பது சிறந்ததாகும்.
- ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தகமானது பெருந்தொகையான நாடுகள் மற்றும் உற்பத்திப் பொருட்களுடன் தொடர்புபட்டாலும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி குறியீடுகள் வர்த்தகமாற்று வீதத்தை கணக்கிட பயன்படுகிறது.

b) i. பொருளாதார வளர்ச்சி என்பது காலப்போக்கில் பொருளாதாரத்தில் உற்பத்தித் திறனின் விரிவாக்கமாகும். இது உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பாகும். பொருளாதார வளர்ச்சியானது அதிகரித்த எண்ணிக்கையான வளங்கள், உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார தொழிநுட்ப முன்னேற்றம் என்பவற்றால் பாதிக்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சிவீதத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சியானது அளக்கப்படுகிறது.

ii. பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்களானது பின்வருமாறு சுருக்கலாம்.

- பொருளாதார வளர்ச்சியானது தனிநபருக்குரிய வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வறுமையைக் குறைத்தல் மூலம் மக்களின் வாழ்வின் தரத்தை முன்னேற்றுகிறது.
- பொருளாதார வளர்ச்சியானது ஒரு நாட்டின் முதலீடுகள் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அதிக தொழில்களை உருவாக்குகிறது.
- வியாபார நம்பிக்கை மேம்படுத்தப்படும்.
- அரசாங்க வருவாயை அதிகரிப்பதால் சாதகமான நிதிச் சூழலை உருவாக்குகிறது.
- ஒரு நாட்டின் பொருளாதார சக்தியை அதிகரிக்கிறது.

***(10 புள்ளிகள்)***

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C


**கட்டாய வினா.**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) a. தனியுரிமையின் 5 பிரதான பண்பியல்புகளாவன.

1. சந்தையில் ஒரு தனி நிறுவனமாக வியாபித்திருத்தல். (தனி விற்பனையாளர்)
2. சந்தையில் விற்பனையாகிய ஒரு தனித்தன்மையான பொருள் பலவகைப்பண்புகளுடன் கூடிய உற்பத்திப் பொருளாக கருதப்படல்.
3. சந்தையினுள் நுழைவது மிகவும் கடினமானது அல்லது சாத்தியமற்றதாகும்.
4. கொள்வனவு செய்பவர்கள் பொருள் பற்றிய விலையின் அறிவைக் கொண்டிராதிருத்தல்.

b.




இலாப உச்சப்புள்ளி M ஆகும்.

MR = MC

சமநிலை எண்ணிக்கை $Q_1$ மற்றும் விலை $P_1$ ஆகும்

**உச்ச சாரசரி இலாபம் = <u>$P^2$ $P^1$ RS</u>**

தனியுரிமை நிறுவனம் உச்ச சாரசரி இலாபத்தை ஈட்டுகிறது. ஏனெனில் விற்பனை விலையானது சராசரி கிரயத்தை பார்க்கிலும் அதிகமானது. (AC)

தனியுரிமையாளர் $Q_1$ அலகுப் பொருட்களை உற்பத்தி செய்கிறார். இச்சமநிலையில் சராசரிக் கிரயமானது $P^2$. விலை $P^1$ ஆனது சராசரிக் கிரயம் $P^2$ இனைவிட அதிகமானது.

| | |
|---|---|
| மொத்த வருவாய் | $OP^1RQ^1$ |
| கழிக்குக-மொத்தக் கிரயம் | $OP^2SQ^1$ |
| **உச்ச சாரசரி இலாபம்** | $P_2P_1RS$ |

(B) a.

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்பது ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் நடைபெறும் பொருளாதார செயற்பாடுகளில் இருந்து சேர்க்கப்படும் பெறுமதிகளின் சேர்க்கையாகும். இப்பெறுமதியே ஒரு நாட்டின் புவியியல் எல்லைகுள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமதியாகும்.

   மொத்த தேசிய உற்பத்தி (GNP) குறிப்பிட்ட காலத்தில், அதாவது ஒரு வருடத்தில் அந்நாட்டில் குடியிருப்பவரினால் நாட்டின் உள்ளே மற்றும் வெளியே உருவாக்கப்படும் பொருட்கள் சேவைகளின் பணப்பெறுமதியாகும். இங்கு நாட்டில் குடியிருப்பவர்களால் உற்பத்தி செய்யப்படுவதையே முக்கியமாக கருதப்படுகிறது. அதாவது எந்தப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டதென்பதை முக்கியமாக கருதவில்லை.

2.

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | = | xxx |
| கூட்டுக/கழிக்குக: வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் | = | xx / (x) |
| **மொத்த தேசிய உற்பத்தி** | = | **xxxx** |

3. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் = வெளிநாட்டிலிருந்து காரணி வருமான பற்றுச்சீட்டு - வெளிநாட்டிலிருந்து காரணி வருமான கட்டணம்

   ஆகவே,

   GNP = GDP + / - NFIA

4. NFIA நேர்மறை ஆனது எனின் GNP ஆனது GDP இனைவிட அதிகமாகும்.
   NFIA எதிர்மறை எனின் GNP ஆனது GDP இனைவிட குறைவானது.

b.

| உருப்படி | மில்லியன் ரூபா. |
|---|---|
| தொழில் வருமானம் | 360,000 |
| வாடகை வருமானம் | 220,500 |
| சுயதொழில் வருமானம் | 190,500 |
| வியாபாரத் துறையினால் ஈட்டப்பட்ட இலாபம் | 210,600 |
| வட்டி வருமானம் | 162,000 |
| **தேறிய உள்நாட்டு பொருள் / வருமானம் FC** | **1,143,600** |
| கூட்டுக: மூலதனத் தேய்மானம் | 130,600 |
| **மொத்த உள்நாட்டு பொருள் / வருமானம் FC** | **1,274,200** |
| கூட்டுக: நேரில் வரிகள் | 120,300 |
| கழிக்குக: மானியங்கள் | 100,500 |
| **மொத்த உள்நாட்டு பொருள் / வருமானம் MP** | **1,294,000** |
| **கூட்டுக: வெளிநாட்டு தேறிய காரணி வருமானம்** | **(94,000)** |
| **மொத்த தேசிய உற்பத்தி / வருமானம் MP** | **1,200,000** |

*(10 புள்ளிகள்)*

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2014 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*